

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் டி.சிவசுப்பிரமணியன் அவர்களின் தாயார் திருமதி.கோமதி அம்மாள் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் உயிரிழந்தது அறிந்து சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அவருடைய இல்லத்துக்குச் சென்று, சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட அவர்களது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. உள்ளார்.

### தியாகி


# இம்மானுவேல் சேகரனார் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 10–

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு நாட்டு விடுதலைக்காகச் சிறை ஏகியவரும், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காக இரட்டைக்குவளை எதிர்ப்பு மாநாடு உள்ளிட்ட பெரும் போராட்டங்களை முன்னெடுத்தவருமான தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாள்!**



**கடந்த ஆண்டு, அவரது நூற்றாண்டை முன்னிட்டு, இம்மானுவேல் சேகரனார் நல்லடக்கம் செய்யப்பட்ட பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டது நமது திராவிட மாடல் அரசு!**

**அவரது நினைவுச் சின்னங்களும் வரலாறும் அவர் முன்னெடுத்த உரிமைப்போரும் நமது சமூகநீதி முயற்சிகளுக்கு என்றும் ஊக்கமளிக்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (09.10.2024) வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் தேசிய நெடுஞ்சாலை அருகாமையில் உழவர் அங்காடிகள் அமைப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை ஆணையர், முதன்மைச் செயலாளர் ஜி.பிரகாஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை ரேஸ் கிளப்பில் செயல்பட்டு வந்த

# கோல்ஃப் மைதானத்தை தோண்டும் பணிகளுக்கு தடை விதிக்க முடியாது!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை. அக் 11 -

சென்னை ரேஸ் கிளப்பில் செயல்பட்டு வந்த கோல்ஃப் மைதானத்தை தோண்டும் பணிகளுக்கு தடை விதிக்க முடியாது என சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை கிண்டி ரேஸ் கிளப்பில் குதிரை பந்தய சுற்றுப்பாதை வழித்தடத்தின் நடுவில் 147 ஆண்டுகளுக்கு முன்பு கோல்ப் மைதானம் அமைக்கப்பட்டது. இதனை மெட்ராஸ் ஜிம்கானா கிளப் நிர்வகித்து வருகிறது.

ரேஸ் கிளப்புக்கு வழங்கப்பட்ட 160 ஏக்கர் நிலத்துக்கான குத்தகை ரத்து செய்த தமிழக அரசு. ரேஸ் கிளப்பின் நுழைவுவா யில்களை சீல் வைத்தது. இதை எதிர்த்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் கோல்ப் மைதானத்தில் சில பணிகளை மேற்கொண்டு வருவதால் கோல்ப் மைதானத்தை சேதப்படுத்தும் தமிழக அரசுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று ஜிம்கானா கிளப் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

அந்த மனுவில் ஜிம்கானா கிளப், ரேஸ் கிளப் உறுப்பினர்கள் கோல்ப் மைதானத்தில் விளையாடி வருவதாகவும் மைதானத்தை பராமரிக்க ஆண்டுக்கு 15 லட்சம் ரூபாய் செலவிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அங்குள்ள சமையலறை, மனமகிழ் மன்றம், மதுபான பார் உள்ளிட்ட இடங்களில் 50 க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருவதாகவும் இதற்கான வசதிகளை 500 உறுப்பினர்கள் வரை வழக்கமாக பயன்படுத்தி வந்ததாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் , நாட்டிலேயே பழமையான 3 வது கோல்ஃப் மைதானமான இந்த மைதானத்திற்கு செல்லும் நுழைவு வாயில் சீல் வைக்கும் முன் தங்கள் தரப்பு விளக்கங்களை தெரிவிக்க எந்த அவகாசமும் வழங்கப்படவில்லை எனவும் இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே அரசுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதி செந்தில் குமார் முன்பு விசாரணைக்கு வந்த போது ஜிம்கானா தரப்பில் மூத்த வழக்கறிஞர் பி.ஆர் ராமன் ஆஜராகி வாதிட்டார்.

ஜே.சி.பி டிராக்டர், புல்டவுசர் ஆகிய இயந்திரங்களை கொண்டு 90 மீட்டர் அகலத்திற்கு 10 மீட்டர் ஆழத்திற்கு குழி தோண்டப்பட்டுள்ளதாகவும், இதனால் ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய நிலையை நீட்டிக்க உத்தரவிட வேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் அரசு நிலம் சென்னை ரேஸ் கிளப்க்கு தான் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த இடங்களில் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என வழக்கு தொடர்வதற்கு ஜிம்கானா கிளப்புக்கு எந்த ஒரு அடிப்படை உரிமை இல்லை எனவும் இதே கோரிக்கையுடன் சிவில் வழக்கில் ஜிம்கானா கிளப் தாக்கல் செய்ததாகவும் சுட்டி காட்டினார். இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி எந்த ஒரு இடைக்கால உத்தரவையும் பிறப்பிக்க முடியாது என கூறி மனுவுக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை அக்டோபர் 24 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் மாற்றம்!

## அக். 19 அன்று நடைபெறுகிறது!

சென்னை, அக். 11 -

12.10.2024 (சனிக்கிழமை) அரசு பொது விடுமுறை என்பதால் அன்று நடைபெற வேண்டிய மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் மாற்றாக, 19.10.2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 -மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4- தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 -திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

# தி.மு.க. அயலக அணிக் கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

கழக பவள விழா கொண்டாட்டம், தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, இளைஞரணிச் செயலாளர், இளந்தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா ஆகியவற்றை சிறப்பான முறையில் நடத்திட விழுப்புரத்தில் வரும் 18.10.2024 (வெள்ளிக்கிழமை) அன்று தி.மு.க. அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**
செயலாளர், கழக அயலக அணி

### திருச்சி வடக்கு மாவட்ட

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தலைமை திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன்! முன்னிலை தர்மன் ராஜேந்திரன் - மெடிக்கல் முரளி!

திருச்சி, அக். 11 -

திருச்சி மாவட்டம், துறையூரில் 02.10.2024 மாலை 5:30 மணி அளவில் ஏ வி எஸ் மண்டபத்தில் திருச்சி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு மத்திய மண்டல பொறுப்பாளர் மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

மேலும் நகர்மன்ற செயலாளர் மெடிக்கல் முரளி , மத்திய ஒன்றிய செயலாளர் இளா. அண்ணாதுரை, மேற்கு ஒன்றிய செயலாளர் வீரபத்திரன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், துறையூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி. சரண்யா மோகன்தாஸ், பொதுக்குழு உறுப்பினர் கிட்டப்பா, வடக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் செல்லமுத்து , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. கிருபா, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் திருமூர்த்தி , மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அம்மன் பாபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சுரேஷ்குமார் , மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் மணிவண்ணன், மாணவரணி துணைத் தலைவர் பிரபாகரன் , பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கலை செல்வன் , விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கௌதம் , கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் வடக்கு மாவட்ட தலைவர் கஸ்டம்ஸ் மகாலிங்கம் , மாவட்ட அமைப்பாளர் கா. லெனின் , மாவட்டத் துணைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.தமிழரசன், செந்தில், இளங்கோவன், ராஜ்குமார் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சார்பாக அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு கலைஞரின் கவிதைகள் வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடத்துவது சம்பந்தமாகவும், திருச்சி வடக்கு மாவட்ட கழகத்தின் கலை, இலக்கி, பகுத்தறிவுப் பேரவை நகர பேரூர் கழக, ஒன்றிய கழக நிர்வாகிகளை நியமிப்பது சம்பந்தமாகவும், தமிழகத்தின் துணை முதல்வராக பொறுப்பேற்று இருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாகவும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மத்திய மண்டல பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் உரையாற்றினார்கள்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து நிர்வாகிகளையும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர் லெனின் வரவேற்றார். தமிழரசன் நன்றியுரை ஆற்றினார்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி, திட்டக்குடி நகராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் ரூ. 1 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை துவக்கி வைத்து மற்றும் புதிய குடிநீர் குழாய், மழைநீர் வடிகால், சிறுபாலம், சாலை, கருமகாரிய மண்டபம் போன்ற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கெ. பழனிசாமி

### அக்டோபர் 11 (2016)



**தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**